வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 302/2020

வழக்குசாட்சி LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கண்ணையா | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 70 |

தேதி 01.04.2026

எதிரிகள் 2,5 ஆஜர். 1, 4 ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மூலக்கடையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். தேதி ஞாபகமில்லை, நவம்பர் மாதம் 2014 ம் வருடம் நான் மூலக்கடையில் ஸ்ரீ கெஜலட்சுமி இண்டஸ்டிரிஸ் பேரில் இரும்பு தளவாடங்களை சரிசெய்யும் கம்பெனி நடத்தி வருவதில் எனது கம்பெனியில் இருந்த கம்பி வேலிகளை மாதவரம் ரோடு சைடு இருந்ததினை எடுத்து அத்துமீறி உள்ளே நுழைந்தார்கள். நான் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரில் உள்ளே நுழைந்த நபர்களின் பெயரை அளித்துள்ளேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் தான் புகார் அளித்தேன். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எந்த தேதி புகார் அளித்தேன் என்றால் ஞாபகமில்லை. நவம்பர் மாதம் 2014 ம் வருடம் நடந்தது. நான் சம்பவ இடத்தின் வாடகைதார்ர் என்றால் ஆமாம். அந்த இடத்தின் உரிமையளார் யார் என்றால்

கோவிந்தராஜூலு நாயுடு. எனது புகாரில் 50 நபர்களுடன் வந்த்தாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு சம்பந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். சிவில் வழக்கு யார் யாருக்கு நடக்கிறது என்றால் எனக்கும் எனது இடத்தின் உரிமையளாருக்கும் நடக்கிறது.

சம்பவ இடத்தில் இருந்த ஆக்கிரமிப்பினை நெடுஞ்சாலைத்துறையினர் அகற்றினார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு அகற்றப்பட்ட ஆக்கிரமிப்பு இடம் தான் நான் வாடகைக்கு இருந்த இடம் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் சர்வே எண் என்னவென்றால் மாதவரம் கிராமம் 1096. மேற்படி சம்பவ இடத்தில் 1வது எதிரி 2வது எதிரிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் பத்திரப்பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் ஆமாம். மேற்படி சம்பவ இடத்தில் யாரும் உள்ளே நுழையக் கூடாது என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற பேராணை எண்–26585/2014 ல் என்மீதும், தொடரப்பட்டு அதில் உத்தரவானது வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

சம்பவ இடமானது எதிரிகளுடைய இடம் என்றாலும் அவர்களது இடத்திற்கு பின்னால் தான் நான் வாடகைக்கு வந்த இடம் உள்ளது என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வாடகைதாரர் மட்டுமே என்றால் ஆமாம். நான் வாடகைக்கு இருந்த இடத்திற்கு உண்டான நஷ்டத்தொகையினை எனது இடத்தில் உரிமையாளரிடம் இருந்து பெற்றுக் கொண்டு காலி செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வாடகைக்கு வந்த இடத்தினை காலி செய்துவிட்டு எதிரிகளுக்கு சொந்தமான இடத்தில் மீண்டும் தகரத்தினாலான ஷெட் அமைத்து உள்ளேன் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு உண்டான நிலப்பிரச்சனை ஆனது எதிரிகளுக்கும் எனது இடத்தின் உரிமையாளருக்கு மட்டுமே உள்ளது என்றாலும் எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் உரிமையளருக்கும் மட்டுமே சிவில்

வழக்கானது நிலுவையில் இந்த நீதிமன்றத்தில் உள்ளது என்றால் ஆமாம். வழக்கறிஞர் ரவி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் ரவி எனக்கு மிகவும் நெருக்கமான நபர் என்றால் இல்லை. வழக்கறிஞர் ரவி என்னிடம் சிவில் வழக்கு தொடர்பாக பேச வந்த்தினை திசை திருப்பி குற்ற வழக்காக மாற்றி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் துறையிலும் மேற்படி புகாரினை சரியான முறையில் விசாரணைச் செய்யாமல் எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. நிலம் தொடர்பான வழக்கினை குற்றவியல் வழக்காக மாற்றி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார் பொய்யாக அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு சொந்தமான இடத்தில் நான் ஆக்கிரமித்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக புகாரினை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.